# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

# அ.வ எண் 68/2013

| | |
|---|---|
| பெயர் | .. பாண்டியராஜன் (பிசா2) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2024 ஆண்டு அக்டோபர் மாதம் 16 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் அருணா ரூபாவதி அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.
16.10.2024

**<u>முதல் விசாரணை:</u>**

எனது பெயர் பாண்டியராஜன். நான் மேற்படி முகவரியில் குடியிருக்கிறேன். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. அதன் அடிப்படையில் இன்று ஆஜர் ஆகியுள்ளேன். எனக்கு வரப்பெற்ற அழைப்பாணை உடன் உயில் ஆவணத்தின் ஜெராக்ஸ் வந்தது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை பார்த்தேன். புஷ்பகாந்தியம்மாள் என்பவர் அவரது மகன் சிவாஜி ராஜன், மருமகள் அமுதா ஆகிய இருவருக்கும் 18.06.2003 தேதியில் உயில் ஆவணம் எழுதிக்கொடுத்தார். அந்த ஆவணத்தில் புஷ்பகாந்தியம்மாள் கையொப்பம் செய்தார். அந்த ஆவணத்தில் நானும் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பிசாஆ.6 உயில் ஆவணத்தில் 6 வது பக்கத்தில் உள்ள சாட்சிகள் என்று இருப்பது முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **பிசாஆ.15**. என்னைத் தவிர அந்த ஆவணத்தில் வேல்ச்சாமி என்பவர் கையொப்பம் செய்தார். அந்த உயில் ஆவணத்தை வழக்கறிஞர் திரு. அண்ணாமலை என்பவர் எழுதினார். அந்த உயில் ஆவணத்தை என்னிடம் படித்துக்காண்பித்தார்களா என்றால் படித்துக் காண்பித்தார்கள். நான் அந்த உயில் ஆவணத்தில் மதியம் 2.30 மணிக்கு கையொப்பம் செய்தேன். அந்த உயில் ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் மற்றும் யார்யாருக்கு அந்த சொத்துக்கள் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும். கோவில்பட்டி பழைய போஸ்ட் ஆபிஸ் அருகில் உள்ள வீட்டை அவரது மகன் சிவாஜி ராஜனுக்கும், சிவந்திப்பட்டியில் உள்ள காடு அவரது மருமகளுக்கும் கொடுத்தார். அதில் கண்ட சொத்துக்கள் புஷ்பகாந்தியம்மாளுக்கு சொந்தமானது என்று கூறினார்கள். அந்த உயில் ஆவணத்தை முழுமையாக என்னிடம் படித்துக்காண்பித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

நான் கோவில்பட்டி, வேலாயுதபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கோவில்பட்டி மார்க்கெட் ல் சாக்கு வியாபரம் செய்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து நான் கடை வைத்துள்ள முகவரிக்கு அழைப்பாணை வந்தது. உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தபோது வசித்து வந்த முகவரியில் தான் இன்று வரை வசித்து வருகிறேன். நான் சாக்கு வியாபாரம் செய்து வரும் முகவரி சிவாஜி ராஜனுக்கு தெரியுமா என்றால் தெரியாது. சிவாஜி ராஜன் என்னை நேரில் சந்தித்து நான் எங்கு கடை வைத்துள்ளேன் என்ற விவரத்தை என்னிடம் கேட்டாரா என்றால் இல்லை. எனக்கும் சிவாஜி ராஜனுக்கும் எவ்வளவு நாள் பழக்கம் என்றால் எனக்கும் சிவாஜி ராஜனின் பெற்றோர்களுக்கும் தான் பழக்கம். சிவாஜி ராஜனின் பெற்றோர்கள் எனக்கு சுமார் 35 வருடங்களாக தெரியும். நானும் அவர்களும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள். நான் குடியிருக்கும் முகவரியைக் காட்டும் ஆதார் அட்டை என்னிடம் உள்ளது. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனது ஆதார் அட்டையில் என்னுடைய குடியிருப்பு முகவரிதான் காட்டப்பட்டுள்ளது. உயில் ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள எனது முகவரிக்கு ஆதார் அட்டை இல்லை என்றாலும், அதனால் ஆதார் அட்டை நான் கொண்டு வரவில்லை என்றாலும் சரியல்ல. உயில் ஆவணத்தில் கண்ட 1வது சாட்சியின் முகவரியில் பாண்டியராஜன் என்ற நபர் வசிக்கவில்லை என்றாலும், அதனால்தான் மேற்படி முகவரிக்கு அழைப்பாணை அனுப்பப்படவில்லை என்றாலும் சரியல்ல. பாண்டியராஜன் என்பவர் அந்த முகவரியில் வசித்துவரவில்லை என்றால் சரியல்ல. அதனால் உயில் ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள பாண்டியராஜன் என்ற நபரும் அழைப்பாணை சார்பு செய்யப்பட்ட சாக்கு கடை வைத்துள்ள பாண்டியராஜனும் வெவ்வேறு நபர்கள் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள பாண்டியராஜன் என்ற நபருக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகி மனைவி, 2 குழந்தைகள் உள்ளார்கள். எனக்கு குடும்ப அட்டை உள்ளது. வாக்காளர் அடையாள அட்டை உள்ளது. நான் உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த சமயத்தில் எனது முகவரிக்காக எனது குடும்ப அட்டை கொடுத்தேன். அந்த குடும்ப அட்டையை அந்த வழக்கறிஞர் பார்த்தார். அந்த குடும்ப அட்டையை வழக்கறிஞர் பதிவு செய்துகொண்டாரா என்றால் அது எனக்கு தெரியவில்லை. உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த வேல்ச்சாமி என்பவர் கோவில்பட்டியைச் சார்ந்தவர். அந்த உயில் ஆவணத்தில் அவர் கையொப்பம் செய்வதற்கு முன்பே 15 வருடங்களாக அவர் எனக்கு பழக்கமானவர். சிவாஜிராஜனின் தந்தை பலசரக்கு கடை வைத்திருந்தார். நான் அவரது கடைக்கு சாக்கு எடுக்கப்போன வகையில் அவர் எனக்கு பழக்கமானார். வேல்ச்சாமி என்பவர் லாரி வைத்திருந்தார். அந்த லாரியில் சாக்கு ஏற்றும் வகையில் எனக்கு நன்கு பழக்கமானவர். நான் உயில் ஆவணத்தில் முதலில் கையொப்பம் செய்தேன். எனக்கு அடுத்துதான் வேல்ச்சாமி கையொப்பம் செய்தார். வேல்ச்சாமி அடையாள அட்டையாக என்ன ஆவணம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கறிஞர் திரு. அண்ணாமலை அவர்கள் வீட்டிற்கு புஷ்பகாந்தியம்மாள் என்னை அழைத்துச்சென்றார். உயில் எழுதிய சமயத்தில் புஷ்பகாந்தியம்மாளுக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 65 வயது இருக்கும். நானும் புஷ்பகாந்தியம்மாளும் ஒன்றாக வழக்கறிஞர் வீட்டிற்கு செல்லவில்லை. புஷ்பகாந்தியம்மாள் முதலில் வழக்கறிஞர் வீட்டிற்கு சென்றுவிட்டார்.

நான் அதற்கு பின்பு தான் வழக்கறிஞர் வீட்டிற்கு சென்றேன். வேல்ச்சாமி நான் அங்கு சென்றபின்னர் சுமார் 15 நிமிடத்தில் அங்கு வந்து விட்டார். நான் வழக்கறிஞர் வீட்டிற்கு செல்வதற்கு முன்பு எவ்வளவு நேரம் முன்பாக புஷ்பகாந்தியம்மாள் வழக்கறிஞர் வீட்டிற்கு சென்றார் என்றால், அது எனக்கு தெரியாது. புஷ்பகாந்தியம்மாள் வழக்கறிஞர் வீட்டிற்கு எந்த வாகனத்தில் சென்றார் என்ற விவரம் என்கு தெரியாது. நான் வழக்கறிஞர் வீட்டிற்கு சென்ற போது புஷ்பகாந்தியம்மாள் அங்கு இருந்தார். வழக்கறிஞர் என்னிடம் அந்த ஆவணத்தை படித்துக்காண்பித்தார். நான் அதில் கையொப்பம் செய்தேன். வழக்கறிஞர் உயில் ஆவணத்தை படித்துக்காண்பித்தபோது வேல்ச்சாமி அங்கு இருந்தாரா என்றால் இருந்தார். புஷ்பகாந்தியம்மாள் உடன் அவரது மூத்த மகள் விஜயா என்பவரும் உடன் வந்திருந்தார். அந்த விஜயா என்பவர் உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை. புஷ்பகாந்தியம்மாள் அந்த உயில் ஆவணத்தில் கைரேகை வைத்தாரா என்றால் இல்லை. அவர் கையொப்பம்தான் செய்தார். உயில் ஆவணம் தவிர வழக்கறிஞர் என்னிடமோ புஷ்பகாந்தியம்மாளிடமோ வேறு ஏதாவது புத்தகத்தில் கையொப்பம் வாங்கினாரா என்றால் இல்லை. வழக்கறிஞர் திரு. அண்ணாமலை அவர்களது அலுவலகம் கோவில்பட்டியில் உள்ள வக்கீல் தெருவில் மத்தியில் உள்ளது. 18.06.2003 தேதியில் நான் கூறும் வழக்கறிஞர் திரு. அண்ணாமலை அவர்களது அலுவலகம் வக்கீல் தெருவிலே இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் வீட்டிற்கு சென்றதாகவும், புஷ்பகாந்தியம்மாள் வழக்கறிஞர் வீட்டிற்கு சென்றதாகவும், புஷ்பகாந்தியம்மாள் உயில்ஆவணத்தில் கையொப்பம் செய்ததாகவும், நான் அதில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், கூறுவது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. அந்த உயில் ஆவணத்தை வழக்கறிஞர் திரு. அண்ணாமலை தயார் செய்ததாக நான் கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. 2003ம் வருடம் வழக்கறிஞர் திரு. அண்ணாமலை அவர்களின் அலுவலகம் எட்டையபுரம் ரோட்டில்தான் இருந்தது என்றால் சரியல்ல. எனக்கு ஆங்கிலம் தெரியாது. நான் குறிப்பிடும் உயில் ஆவணத்தில் வழக்கறிஞர் திரு. அண்ணாமலை அவர்களின் அலுவலக முகவரியாக எட்டையபுரம் ரோடு என்றுதான் உள்ளது என்றால் சரியல்ல.அந்த உயில் ஆவணம் சிவாஜிராஜனால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டு அதில் புஷ்பகாந்தியம்மாளின் கையெழுத்து மோசடியாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. புஷ்பகாந்தியம்மாள் உயிருடன் இருந்தபோது அந்த உயில் ஆவணம் தயார் செய்யாமல் அவரது இறப்பிற்குபின் முன்தேதியிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த உயில் ஆவணத்தில் முத்திரைத்தாள் 2005ம் வருடம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த முத்திரைத்தாளே மோசடியானது என்றால் சரியல்ல. நான் சிவாஜிராஜனின் நண்பர் என்ற அடிப்படையில் அவர் ஆலோசனைக்கு இணங்க நான் நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கை பொறுத்து உயில் ஆவணத்தில் கண்ட 1வது சாட்சியைப்பொறுத்து Name Lender என்றால் சரியல்ல. அதனால்தான் அந்த உயில்ஆவணத்தில் 1வது சாட்சியின் முகவரிக்கு அழைப்பாணை அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் நான் என்னுடைய முகவரி ஆதாரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2வது சாட்சி வேல்ச்சாமி எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.